


தேனி வடக்கு மாவட்டம் தேனியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. தலைமையில் வேட்பாளர்கள் அறிமுக கூட்டம் நடைபெற்றது இந்த நிகழ்ச்சியில் போடி தொகுதி வேட்பாளர் முன்னாள் முதல்வர் ஓ பன்னீர்செல்வம் சிறப்புரை ஆற்றினார் உடன் சரவணகுமார் எம்.எல்.ஏ. மாவட்ட அவை தலைவர் பிடி செல்ல பாண்டியன் பெரியகுளம் தொகுதி பார்வையாளர் முன்னாள் எம்.எல்.ஏ. முத்துராமலிங்கம். போடி தொகுதி பார்வையாளர் நேரு பாண்டியன் மற்றும் ஒன்றிய செயலாளர்கள், நகர செயலாளர்கள், பேரூர் செயலாளர்கள் மத சார்பற்ற முற்போக்கு கூட்டணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர் .



நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் சிவகங்கை தொகுதியில் போட்டியிடும் முக்குலத்தோர் புலிப் படை தலைவர் நடிகர் கருணாசுக்கு சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் சால்வை அணிவித்து வாழ்த்து கூறினார். உடன் மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர், கொத்தமங்கலம் சேது, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார், மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் திருச்செந்தூர் சட்டமன்ற தொகுதியின் வெற்றி வேட்பாளர் தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் அனிதா ஆர். ராதா கிருஷ்ணன் வெற்றி சின்னமாம் உதய சூரியன் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு பிரச்சாரம் மேற்கொண்டார். நிகழ்வில் மகளிர் அணி நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் உற்சாகமாக வரவேற்றனர்.



சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் மாமன்னர் மருதுபாண்டியர்கள் நினைவிடத்தில் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.உடன் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.




மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி தூத்துக்குடி தெற்கு மாவட்டம் தி.மு.க. சார்பில் ஒட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பை. மூ.ராமஜெயம் தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் பெ.கீதா ஜீவன், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.எஸ்.டி. செந்தூர் மணி, அரசு வழக்கறிஞர் பூங்குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் தங்கதுரை பாண்டியன், ஏ.எம்.ஸ்டாலின், பால்துரை மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை பிரசன்ன ஆலயம் மற்றும் கூ. ராமசாமிபுரம் பரிசுத்த அந்திரேயாவின் ஆலயத்தில் பேராயரிடம் வாழ்த்துப் பெற்ற ஒட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் பை.மூ.ராமஜெயம் வெற்றி சின்னமாம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு பிரச்சாரம் மேற்கொண்டார் உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் செந்தூர் மணி, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் சுரேஷ், ஒன்றிய கழகச் செயலாளர்கள் கே.கே. ஆர்.ஜெயக்கொடி, இளையராஜா, சுப்ரமணியன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் தங்கதுரை பாண்டியன், ஸ்டாலின், பால்துரை, அரசு வழக்கறிஞர் பூங்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தென்காசி சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் டாக்டர் கலை கதிரவனுக்கு தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் தென்காசி ரயில் நிலையத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து தலைவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி தொகுதி மக்களிடம் வாக்குச் சேகரித்தார்.நிகழ்வில் முன்னாள் மாவட்டப் பொறுப்பாளர் தலைமைச் செயற்குழு உறுப்பினர் செல்லத்துரை நகர செயலாளர் சாதிர்,தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆறுமுகசாமி, மாவட்டப் பொருளாளர் ஷெரீப் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




இராமநாதபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு இரண்டாவது முறையாக வேட்பாளராக கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் அவருடைய தந்தையார் நினைவிடத்தில் மரியாதை செலுத்தி பின் அவர் தாயாரிடம் ஆசி பெற்றார்



மதுரை தெற்கு மாவட்டம் திருமங்கலம் தொகுதி கழக வேட்பாளரும் மாவட்ட செயலாளருமான சேடப்பட்டி மு. மணிமாறன் வெற்றி பெறுவதற்கான தேர்தல் பணி தொடர்பான தெற்கு மாவட்ட இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அமைப்பாளர் விமல் தலைமையில் திருமங்கலத்தில் நடைபெற்றதில் தேர்தல் பணி தொடர்பாக விண்ணப்ப படிவங்களை இளைஞர்கள் பெற்றனர். உடன் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஆதவன் அதியமான்,சாதிக் மொகைதீன், ஜெகதீஷ், வெற்றி, நகர இளைஞரணி அமைப்பாளர் ராஜ்குமார், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள் முத்துப்பாண்டி, சஞ்சீவி, சுந்தரபாண்டியன், வில்லூர் ஆறுமுகம், முருகானந்தம், காளிங்கராஜா, பாலமுருகன், சிவா பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள் சாரதி, ராமச்சந்திரன் மற்றும் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள்,நகர, பேரூர், இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பங்கேற்றனர்.